Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 273

சனிக்கிழமை 26 ஒகஸ்ட் 2023

ஆவணி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



வடக்கு நீதிமன்றங்களுக்கு முன்பாக

## வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் போர்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 26

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒரு மனநோயாளி என்றும் அவரைத் தகுதி நீக்கம் செய்யவேண்டும் என்றும் தெரிவித்த கருத்துக்களுக்கு எதிராக வடமாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் நேற்று ஒரு மணிநேரம் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »11

## நாடாளுமன்றத்துக்கு வெளியே கதைக்கத் தைரியம் உண்டா?

வவுனியா சட்டத்தரணிகள் வீரசேகரவுக்குச் சவால்

வவுனியா, ஒக. 26

நாடாளுமன்றத்தில் வைத்து நீதித்துறை மீது கடும் விமர்சனங்களை முன்வைத்துவரும் வீரசேகர, நாடாளுமன்றத்துக்கு வெளியே தன் »11

## ஆளுநரின் செயலராக மு.நந்தகோபாலன்



யாழ்ப்பாணம், ஒக. 26

வடமாகாண ஆளுநரின் செயலராக மு.நந்தகோபாலன் நியமிக்கப்படவுள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதம் நேற்று அவருக்கு அனுப்பி »09

போர்க்காலத்தைவிட

## இலங்கையில் இப்போதே புலம்பெயர்வுகள் அதிகம்

அமெ. தூதுவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக. 26

போர்க்காலத்தை விடவும் இப்போதுதான் புலம்பெயர்வு அதிகரித்துள்ளது. குறிப்பாக மூளைசாலிகள், தொழில் நிபுணத்துவம் பெற்ற »11

சிங்கள - பௌத்த சக்தியுடன்

## கஜேந்திரகுமாரின் வீட்டை மீண்டும் முற்றுகையிடுவோம்

தேரர் ஆவேசம்

கொழும்பு, ஒக. 26

'சிங்கள - பௌத்த மக்களை அணிதிரட்டி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிட மீண்டும் வருவோம்' »11

தீவகத்துக்குத் தினமும்

## 656,000 லீற்றர் தண்ணீர் தேவை

விநியோகச் சங்கிலிகள் வறட்சியால் முடங்கலாம்

யாழ்ப்பாணம், ஒக. 26

'எல் நினோ' தாக்கத்தால் வடமாகாணம் கடும் வறட்சிக்கு முகம்கொடுத்துள்ள நிலையில், யாழ்ப்பாணத்தின் தீவகப் பகுதிகளுக்கு மட்டும் தினமும் 6 இலட்சத்து 56 ஆயிரம் லீற்றர் »11

## இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் ஊடுருவியது கொரோனா!



கொழும்பு, ஒக. 26

இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிரிக்கெட் உலகின் முக்கியமான தொடர்களில் ஒன்றான ஆசியக் கிண்ணத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த »11

## அதிகாரப்பகிர்வு மிகவும் அவசியம்

ஜே.வி.பி. கருத்து

கொழும்பு, ஒக. 26

ஜனநாயகம் வலுவடைய வேண்டுமெனில் அதிகாரப்பகிர்வு என்பது அவசியம். அவ்வாறு ஜனநாயகம் வலுவடையும்போது தேசிய இனப் பிரச்சினைக்கும் தீர்வுகாண வழி பிறக்கும் என்று ஆலோசனை »11



போதைப்பொருளுக்கு எதிராக

## பாடசாலைச் சிறுவர்கள் கிளிநொச்சியில் பேரணி

கிளிநொச்சி, ஒக. 26

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி பாடசாலைச் சிறுவர்கள் இணைந்து கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டத்திலும் பேரணியிலும் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், பிரதேசசபைகள் மற்றும் வேள்ட் விஷன் »11

## நீர்த் தொட்டியில் வீழ்ந்து பெண் குழந்தை இறப்பு

வவுனியா, ஒக. 26

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் தண்ணீர்த் தொட்டிக்குள் தவறி வீழ்ந்து இரண்டு வயது பெண்குழந்தையொன்று நேற்று உயிரிழந்தது. லிங்கராஜா திவிக்கா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. »11

தாய்வீடு திரும்புங்கள்

## சஜித் தரப்பினருக்கு ஐ.தே.க. அழைப்பு!

கொழும்பு, ஒக. 26

கட்சியை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் தாய்வீடு திரும்பவேண்டும். பிளவடைந்துள்ளவர்களை இணைப்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப்பிரிவில் ஆளணியில்லை துரிதசேவை இடைநிறுத்தப்பட்டது!

## வெற்றிடங்களை நிரப்புமாறு யாழ்.மாவட்டச்செயலர் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஒக. 26**
**யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்கும் காணிப்பிரிவில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் விரைவு காணி உறுதிகளை பெற்றுக்கொள்வதில் மக்கள் நெருக்கடி நிலைமையை எதிர் கொள்கின்றனர். அதனால் துரிதசேவை மறுஅறிவித்தல்வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்டச்செயலர் அ. சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்குகின்ற மாவட்ட காணிப் பிரிவில் இரு உத்தியோகத்தர்களே கடமையாற்றுகின்ற நிலையில் அவர்களில் ஒருவர் சுகவீன விடு முறையில் சென்றுள்ளார். அதன்காரணமாக மக்கள் தமது காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

10 பேர்வரை குறித்த பிரிவில் கட மையாற்ற வேண்டிய நிலையில் இரு உத்தியோகத்தர்களே கடமை யாற்றுகின்றனர். ஒருநாளில் சட்டத் தரணிகள் பலர் இந்தச் சேவையை பெற முனைகின்றபோது அங்கே தனியொருவரால் சேவையை முன் னெடுக்க முடியாது.

இதுதொடர்பில் பல தடவைகள் பதிவாளர் திணைக்களத்துக்கு தெரியப்படுத்தப்பட்டும் வெற்றி டங்கள் நிரப்பப்படவில்லை. ஆவ ணங்களை கையாள்வதற்கு வெளி உத்தியோகத்தர்களை இணைக்க முடியாது. சம்பந்தப்பட்ட திணைக்க ளம் உடன் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-27,125)

# சுட்டெரிக்கும் வெப்பம் நீரிழப்பை தவிருங்கள்

## மருத்துவர் யமுனாநந்தா அறிவுறுத்து



யாழ்ப்பாணம், ஒக. 26
தற்போது நிலவும் வெப்பமான கால நிலையில் நீரிழப்பு ஏற்படுவதை தவிர்க்க அதிகளவு நீரை அருந்த வேண்டும். அத்துடன் வெளி யிடங்களுக்கு வெயில் வேளையில் செல்வதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும் என்று யாழ். போதனா மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக வெப் பமான காலநிலை காணப்படுகிறது. அதனால் மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின் றனர். சுவாசத்தொற்று, நீர்க்கடுப்பு, வியர்க்குரு, வெப்பமயக்கம், நீரிழப்பு உள்ளிட்ட பல நோய்கள் எம்மை இந்தக் காலப்பகுதியில் தாக்க வாய்ப்புள்ளது. அந்தவகையில் உமது உடலில் நீரிழப்பை தவிர்க்க போதியளவு நீரைப் பருகவேண்டும். சாதாரணமாக வயது வந்தவர்கள் 3-4 லீற்றர் நீரை சாதாரணமாக அருந்த வேண்டும். சிறுவர் களும் 2 - 3 லீற்றர் நீரை அருந்துவது அவசிய மாகும். அத்துடன் நீராகாரங்கள் மற்றும் பழ வகைகள் உள்ளிட்டவற்றையும் அதிகளவில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மதிய வேளைகளில் வெளியில் செல்வதைத் தவிர்ப்பதனால் வெப்பத்தால் ஏற்படும் பாதிப்பு களை குறைக்கலாம். இந்த உஷ்ணமான வெப்ப நிலை அடுத்த இரண்டு வாரங்களுக்கு நீடிக்க லாம். வெப்பத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மக்கள் அவதானத்துடன் நடக்க வேண்டும் - என்றார். (ச-26-27)

# போலி மருத்துவமனைகள்: வவுனியாவில் சுற்றிவளைப்பு

## சட்டநடவடிக்கைக்கு ஏற்பாடு

வவுனியா, ஒக. 26
வவுனியாவில் இரண்டு தனி யார் மருத்துவமனைகள் முறைகேடான வகையில் போலியாக இயங்கி வந்தமை கண்டறியப்பட்டு அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற வடமாகாண சுகாதார சேவை கள் திணைக்களப் பணிப்பா ளரின் ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் முறை கேடான முறையில் உரிய தகுதிபெறாத மருத்துவர்கள் சிலர் தனியார் மருத்துவ மனைகளையும் மருந்தகங் களையும் நடத்துவதாக ஊட கவியலாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

அதற்கமைய வடமாகாண சுகாதார சேவைகள் திணைக் களப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தியின் கீழ் வவுனியா பிராந்திய சுகாதார சேவை கள் திணைக்களத்தினர் மற் றும் பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை வவுனியா நெளுக்கு ளத்தில் திடீர்ச் சோதனை களை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆயுள்வேத வைத்தியரொருவர் தனியார் மருத்துவமனையின் பெய ரில் ஆங்கில மருந்துகளை விநியோகம் செய்தமை கண்டறியப்பட்டு பெருந் தொகை மருந்துகள் மீட்கப் பட்டன.

மேலும் சிதம்பரபுரத்தில் ஆயுள் வேத வைத்தியர் என்ற பெய ரில் போலியாக வைத்தியசாலை யொன்றை நடத்தி வந்தமை யும் கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டு சந்தேகநபர்களும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்றும் இரண்டு நிலையங்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது என்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-18)

கிளிநொச்சியில்

# மாணவர்களது போட்டிகளுக்கு மதுசாலைகளில் நிதிசேகரிப்பு!

## பெற்றோர் குற்றஞ்சாட்டு

கிளிநொச்சி ஒக. 26
மாணவர்களின் பிறவிதானச் செயற் பாடுகளுக்காக கிளிநொச்சிப் பாடசாலை கள் மதுவிற்பனை நிலையங்களை நாடி நிதிசேகரிப்பை மேற்கொள்கின்றன என்று பெற்றோரால் குற்றஞ்சுமத்தப்பட் டுள்ளது.

மாவட்டப் போட்டிகள், மாகாணப் போட்டி களுக்கு மாணவர்களை அழைத்துச்செல் வதற்கு பாடசாலையிடம் நிதியில்லை எனக் கூறி மது விற்பனை நிலையங்களை நாடி நிதியுதவியைப் பெற்று மாணவர்களை போட்டிக்கு அழைத்துச் செல்கின்ற நிலைமை கிளிநொச்சியில் சில பாடசா லைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் அவற்றைவிட பாடசாலைகளுக்கு உத வக் கூடிய பல உதவி நிறுவனங்கள் உள்ளபோதும் மதுவிற்பனை நிலை யங்களை நாடுவதை பாடசாலைகளின் நிர்வாகங்கள் தவிர்க்க வேண்டும்.

பாடசாலைகளின் இந்தத் தவறான நிதி சேகரிப்புத் தொடர்பில் வலயக் கல்விப் பணிமனைகள் கண்காணித்து நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கள் தெரிவித்தனர். (ச-13)

## ஒல்லாந்தர் கைப்பற்றிய

# மரபுரிமைச் சின்னங்கள் மீண்டும் இலங்கைக்கு

கொழும்பு, ஒக. 26
இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சிசெய்தபோது ஒல் லாந்தரால் எடுத்துச் செல்லப்பட்ட இலங்கையின் மரபுரிமைச்சின்னங்கள் இலங்கையிடம் ஒப்படைக் கப்படவுள்ளன.

நெதர்லாந்து அரசாங்கத்தின் இராஜாங்க செயலாளர் கனே உஸ்லு நாளை உத்தியோகபூர்வ பயண மொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வந்து அவற்றைக் கையளிக்கவுள்ளார்.

மரபுரிமைச் சின்னங்களை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை புத்தசாசன அமைச்சில் இடம்பெறவுள்ளது.

இலங்கை அரசர்களால் பாவிக்கப்பட்ட பீரங்கி, தங்க மற்றும் வெள்ளிக்கைபிடி போட்ட அரச உத்தியோக பூர்வ வாள்கள், சிங்களக் கத்தி, இரண்டு துப்பாக்கிகள் என்பனவே அன்றையதினம் கையளிக்கப்படவுள் ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

# கெஹலியவுக்கு எதிரான பிரேரணை சகல கட்சிகளும் ஆதரிக்கவேண்டும்

## ஐ.ம.ச. கோரிக்கை

சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெலவுக்கு எதி ரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக் கள் சக்தி கோரிக்கை விடுத் துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுகாதார பிரச்சினைக்கு அமைச்சரே காரணம். மக் கள்மீது உண்மையான அக் கறை இருந்தால் ஆளுங் கட்சியினரும் இதற்கு ஆத ரவளிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சருக்கு எதி ரான நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்ரெம்பர் முதல் வாரத்தில் விவாதம், வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஓ-44)

## காணாமற்போனோர் தினத்தில்

# மன்னாரில் பேரணி; கைகோர்க்க அழைப்பு



சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் மேற்கொள் ளப்படவுள்ள பேரணிக்கு அனைவரும் கை கோர்த்து ஆதரவளிக்க வேண்டும்என்று காணா மல் ஆக்கப்பட்டவர்க ளின் உறவினர்கள் அழைப்பு விடுத்துள்ள னர்.

யாழ். ஊடக அமையத் தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் இத னைத் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை மன்னாரில் பேரணி ஒன்று முன் னெடுக்கப்படவுள்ளது. பேரணி மன்னார் 'சதொச' புதைகுழியிலிருந்து ஆரம்பமாகி விளையாட் டரங்கு வரை இடம்பெ றும். யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மாணவர் கள், வர்த்தக சங்கத்தி னர், அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டா ளர்கள் மற்றும் மதகுரு மார்கள் என அனைத்து தரப்பினரும் போராட் டத்துக்கு ஆதரவு நல்க வேண்டும் என்று ஏற் பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-ரி2)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் எண்டால படிச்ச, டீசண்டான ஆக்கள் எண்டுதான் வெளியாக்களின்ர நினைப்பு. ஆனால் இப்ப அதெல்லாம் மாறிப் போட்டுது. எல்லா இடமும் ஒரே சுத்துமாத்துக் காரர்தான். இந்தவிசயம் தெரியாமல், மாட்டுப்பட்ட கதையொண்டு கிட்டடியில நடந்திருக்கு.

நீர்கொழும்பில இருக்கிற ஒரு குடும்பத்துக்கு யாழ்ப்பாணத்தில வீடு, வளவு வாங்கி இஞ்ச வந்து செட்டிலாக வேணுமெண்டு ஆசை. அதால ஒரு புறோக்கர் மூலமா ஏதும் வீடு கிடைக்குமோ? எண்டு தேடிப் பார்த்திருக்கினம். ' யாழ்ப்பாணம் ரவுணுக்குள்ள ஒரு நல்ல வீடு இருக்கு. ஆனால் விலை ஒருகோடியே 25 லட்சம்'எண்டு புறோக்கர் சொல்லியிருக்கிறார். 'எதுக்கும் நேரில பாத்திட்டு முடிவைச் சொல்லுறம்' எண்டு நீர்கொழும்புக்காரர் சொல்ல, புறோக்கரும் அவையை கையோட யாழ்ப்பாணத்துக்கு கூட்டியந்து, வீடெல்லாம் சுத்திக் காட்டியிருக்கிறார். இப்பத்தைக் காலத்தில இந்த விலைக்கு இப்பிடியொரு வீடு கிடைக்காது எண்ட நினைப்பில, நீர்கொழும்புக்காரரும் வீட்டை வாங்க ஓமெண்டிட்டினம். 'ஒரு கோடியே 25 லட்சம் எண்டு உறுதி எழுதினால் முத்திரைக் காசு கனக்க வரும், அதால 75 லட்சத்துக்கு வீட்டை வாங்கிற மாதிரி உறுதியை முடிப்பம்' எண்டு விக்கிற தரப்பும், வாங்கிற தரப்பும் முடிவெடுத்து உறுதியும் எழுதிட்டினம். உடனேயே முழுக்காசையும் (ஒரு கோடியே 25 லட்சம்) செக் எழுதிக் குடுத்திட்டினம். அதை மாத்தி காசாவும் எடுத்திட்டினம் வீட்டை வித்தவை.

இதுக்குப் பிறகு ஒருநாள், யாழ்ப்பாணம் வந்து, பால் காய்ச்சிறதுக்கு சாமான் வாங்கிவர சந்தைக்குப் போட்டு வந்திருக்கினம் வீட்டை வாங்கின நீர்கொழும்புக்காரர். ஆனால் வீட்டை வந்தவைக்கு ஒரே அதிர்ச்சி. அங்க அவை வாங்கின வீட்டில வேற ஆரோ இருந்திருக்கினம். விசாரிச்சுப் பார்த்தால், அவையின்ர தான் அந்தவீடாம். இடையில கொஞ்சக்காலம் எங்கையோ வெளியில போய் வந்திருக்கினம். அந்தச் சந்தில சிந்துபாடியிருக்குது ஒரு மோசடிக் குரூப். ஆக்களில்லாத வீட்டை தங்கட வீடு எண்டு கள்ள உறுதி முடிச்சு, அதை ஒரு புறோக்கர் மூலமா நீர்கொழும்புக்காரருக்கு வித்து சுளையா ஒருகோடியே 25 லட்சத்தை சுருட்டிப் போட்டு அந்தக் கும்பல் 'எஸ்கேப்' ஆகிட்டுது. இதெல்லாம் பிறகுதான் நீர்கொழும்புக்காரருக்குத் தெரியவந்திருக்கு. உறுதியெல்லாம் வடிவா செக் பண்ணிப் பார்த்தால், இப்ப அந்த வீட்டில இருக்கிறவையின்ர சொந்த வீடுதான் எண்டதும் ஆதாரபூர்வமா தெரிய வந்திருக்கு. புறோக்கரும், வீட்டை வித்த கும்பலும் கம்பி நீட்டினதால, தலையில துண்டைப் போட்டுக் கொண்டு நீர்கொழும்புக்காரர் பொலிஸில முறைப்பாடு செய்திருக்கினம். ஆனால், இவ்வளவு தில்லாலங்கடி வேலை செய்த அந்த மோசடிக் கும்பல், பொலிஸிட்ட இருந்து தப்பவும் ஏதும் பிளான் போடாமல் இருந்திருக்குமோ? பாப்பம், பொலிஸ் உவையையாவது பிடிக்குதோ எண்டு.



- பட்சி

# வடக்கு அபிவிருத்தி; சுவிஸ் ஆதரவுக்கரம்

யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் முழு ஆதரவை வழங்கும்என்று சுவிஸ்தூதரகத்தின் முதன்நிலைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய யாழ்ப்பாணம் வருகை தந்த சுவிஸ் தூதர முதன்நிலைச் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை அவரது அலுவலத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது வடக்கு பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் வடமாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்தார்.

அதற்கு வடக்கு மாகாணத்தில் தற்போது தாம் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் குறித்து வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கமும் முழு ஆதரவு வழங்குமென சுவிஸ் தூதரகச் செயலாளர் குறிப்பிட்டார்.

(ச-20,26,27)

நல்லைக்கந்தனுக்கு

இன்று (26.08.2023) சனிக்கிழமை

ஆறாம் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

YARL SMART (Pvt) Ltd

076 666 5267 / 021 430 0044

No.341, K.K.S. Road, Jaffna.



நல்லூரான் சிறப்பம்சம்

## மயிலேறும் பெருமானைத் தொழுவோமே!

அடியார்கள் குறைகளெல்லாம் தீர்த்திடவே
எழுந்தருள் முருகனவன் வந்திடுவான்!
கொடியோர்கள் செயல்களெல்லாம் ஒழித்திடுவான் !
குறவள்ளி குஞ்சரியார் மணவாளன்!
விடையேறும் பெருமானின் திருமகனாம்!
மணிலேறும் பெருமானைத் தொழுதிடுவோம்!

ப.ம மகேந்திரன்
நாயன்மார்கட்டு

# ஏட்டிக்குப் போட்டியாக மதத்தலங்கள் அமைக்காதீர்

## திருகோணமலையில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

**பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கும் அதிகளவான காணிகள் திருகோணமலையில் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. எனவே, போட்டி போட்டுக் கொண்டு மத வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிப்பதை நிறுத்த வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை விமானப் படைத் தளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

திருகோணமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் வெருகல் முதல் வானம், குமன் கடற்கரையை அபிவிருத்தி செய்வதற்கும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், இந்தப் பகுதியில் நவீன விவசாயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும். மேலும் மகாவலி அதிகாரசபை மற்றும் காணித் திணைக்களத்தையும் இதற்கு இணைத்துக்கொள்ளவேண்டும். திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறைகளில் ஏற்படும் இந்த புதிய முன்னேற்றத்துடன் திருகோணமலை நகரத்தை ஒரு முக்கியமான வர்த்தக நகரமாக மாற்ற வேண்டும். திருகோணமலைக்குப் பின்னர் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இந்த அபிவிருத்தியைக் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

1985 ஆம் ஆண்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, எடின்பரோ பிரபு இங்கு வருகை தந்து வழங்கிய காணிகள், தற்போது வன ஜீவராசிகள் அமைச்சால் காடுகளாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையில் வனப்பரப்பு 32 வீதமாக பேணப்பட வேண்டும். அந்த நிலையில் ஏனைய காணிகள் நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவேண்டும் - என்றார். (ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஊடகர் ஞா.பிரகாஸ் ஞாபகார்த்த குருதிக்கொடை

சாவகச்சேரி, ஓக. 26

சுயாதீன ஊடகவியலாளர் அமரர் ஞா.பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நண்பர்களால் குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறும் மேலதிக விவரங்களை 0775502827, 0761961178 ஆகிய தொலைபேசி இலக்கங்கூடாக பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-ரி3-159)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் 10ஆம் திருவிழாவான நேற்று பூங்காவன உற்சவம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. (ஒ-26,17)

முல்லையில்

## பண்டாரவன்னியன் வெற்றிநாள் நிகழ்வு

முல்லைத்தீவு, ஓக. 26

வெள்ளையருடன் போரிட்டு வெற்றிகொண்ட வன்னியின் இறுதிமன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆம் ஆண்டு வெற்றி நாள் நிகழ்வு நேற்று முல்லைத்தீவில் கடைப்பிடிக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பண்டாரவன்னியனின் திருஉருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி நினைவுகூரப்பட்டது.

நிகழ்வில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், சமூகசெயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2-246)



## வவுனியாவிலும் பண்டாரவன்னியன் நினைவு

வவுனியா, ஓக. 26

மாவீரன் பண்டாரவன்னியனின் 220 ஆவது ஞாபகார்த்த நினைவு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமார், வவுனியா நகரசபை செயலாளர் பூ.செந்தில்நாதன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2-110)

## வாகனம் தடம்புரள்வு சாரதி உயிர்பிழைப்பு

மன்னார், ஓக. 26

தலைமன்னார் பிரதான வீதியில் மாடு ஒன்றுடன் மோதி வாகனமொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் சாரதி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

பேசாலையிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த மகேந்திரா ரக வாகனமே குறுக்கே சென்ற மாட்டுடன் மோதி வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கல்லுடன் மோதி தூக்கி வீசப்பட்டு கவிழ்ந்தது.

விபத்தில் வாகனத்தின் சாரதி சிறு காயங்களுடன் உயிர்தப்பியுள்ளாரெனவும் வாகனத்தில் வேறெவரும் பயணிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3-60)

## கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு உணவு

### கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி, ஓக. 26

சிறுவர் பெண்கள் விவகார அமைச்சின் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தித் திணைக்களத்தால் கர்ப்பிணித் தாய்மார்களுக்குப் போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் அரிசி, பருப்பு, அரிசி மா, சத்துமா, நெத்திலி, பேரீச்சை, சோயா, உளுந்து ஆகிய உணவுப் பொருள்களுக்காக 4 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு அவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அந்தப் பொருள்களின் விலை மற்றும் தரநிர்ணயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது. (ச-ரி2-113)

## ஊர்காவற்றுறையில் இரத்தவங்கி



ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் இரத்தவங்கி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. ஊர்காவற்றுறை மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் திருமதி ரிஷானி சேரலாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், தேசிய இரத்தவங்கிப் பணிப்பாளர் மருத்துவர் லக்ஸ்மன் எதிரிசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் அலைச்சல் ஏற்படலாம்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்து விடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். வீட்டில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ராஜபக்சாக்கள் 'பராக்'!

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ச தனது முதலாவது பதவிக் காலத்தினுள் தமிழீழ விடுதலைப்புலிகளுடான போரை வெற்றிகரமாக முடிவுக்குக்கொண்டு வந்து சிங்கள மக்கள் மத்தியில் அசைக்க முடியாத ஆட்சியாளராக மாறி னார். அதனால் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்தி தனது அடுத்த பதவிக்காலத்தையும் உறுதிப்படுத் திக்கொண்டார். ஆனாலும் 2015 ஆம் ஆண்டு அவருக்கு சறுக்கல் ஏற்பட்டது. அதன் பின்னரும் ராஜபக்சக்கள் ஓய் வெடுத்துவிடவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து காய்களை நகர்த்தினர். நல்லாட்சி அர சாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற் சியை முன்னிறுத்தி சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை களை முன்னெடுத்தனர். தமிழர்களுக்கு தமிழீழம் கிடைக் கப்போகின்றது என்ற அளவுக்கு அவர்களது பரப்புரைகள் சூடுபிடித்திருந்தன. இனவாதம் என்கின்ற அவர்களின் தேர்தல் முதலீடு தெற்கில் அவர்களுக்கு 2018 உள்ளூராட் சித் தேர்தலில் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொடுத்தி ருந்தது. இதன் பின்னர் ரணில் மைத்திரி முரண்பாடு உச்சம் பெற்ற சூழலில் ராஜபக்சக்கள் பின்கதவால் ஆட்சியைப் பிடித்திருந்தாலும் அது நீண்ட நாள் நிலைக்கவில்லை. இதற்கிடையில் 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் அவர்களுக்கு மிகப்பெரிய இனவாதத் தீயை மூட்டுவ தற்கு வாய்ப்பளித்தது. ராஜபக்சக்கள் முகாம் அதைச் சரி யாகப் பயன்படுத்திக்கொண்டது.

இனவாதத்தை முதலீடாக்கி சிங்கள – பௌத்த வாக்கு களால் மாத்திரம் வெல்ல முடியும் என்று கோத்தாபய ராஜபக்ச திடமாக நம்பினார். அதை அப்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சித்தார்த்தனுக்கும் கோத்தாபய கூறியிருந்தார். அவர் சொன்னதைப்போன்று முன்னெப்போதும் இல்லாத வகையில் 'தனிச்சிங்கள வாக்குகளால் தெரிவாகிய ஜனா திபதி' என்ற பெயரை தனக்குரியதாக்கினார். ஆனால் எவ ரும் எதிர்பாராதவகையில் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து பதவியை விட்டோடவேண்டிய நிலைமை கோத்தாபயவுக்கு ஏற்பட்டது. அவருக்கு மாத்திரமல்ல ராஜபக்சக்களும், ராஜபக்சக்களை ஆதரித்தவர்களும் மக் கள் முன் தலைகாட்ட முடியாத நிலைமை ஏற்பட்டிருந் தது. பௌத்த – சிங்கள பேரினவாதமும், பொருளாதார நெருக்கடி என்ற தீயின் முன்பாக பொசுங்கியதைப் போன்ற நிலை உருவானது. ஆனால் அவை எல்லாம் கொஞ்சக்காலத்துக்குத்தான் என்பதைத்தான் இப்போது சுவாலையாக பற்றி எரிந்துகொண்டிருக்கும் இனவாதத் தீ உணர்த்துகின்றது.


அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப் போவது உறுதியாகியுள்ளது. யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே என்பதைப்போல தேர்தல் நடை பெறும் என்பதை தற்போது நாட்டில் நடக்கும் இனவாத – மதவாதச் சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன. தமிழர்கள் மீது வலிந்து திணித்து இனவாத – மதவாத போரைத் தொடுக்கின்றது பௌத்த – சிங்களப் பேரினவாதம். தனது ஆக்கிரமிப்பு எல்லையை விரிவுபடுத்துவதற்காக அது எடுக்கின்ற ஒவ்வொரு நகர்வுகளும் தமிழர்களுக்கு பேரி டியாக விழுந்துகொண்டிருக்கின்றன. போரின் பின்னர் மிகமோசமானதொரு அடக்குமுறையை தமிழினம் தற் போது சந்தித்துக்கொண்டிருக்கின்றது. தமிழர்கள் மீது எல்லாவிதமான வடிவங்களிலும் இந்த இனவாதப்போர் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. நீதியை நிலைநாட்டும் நீதிபதியையும் விட்டுவைக்காத அளவுக்கு பௌத்த – சிங் கள பேரினவாதத்தின் வெறி இருக்கின்றது.

கோத்தா தப்பியோடியபோது நவதுவாரங்களையும் அடக்கி அமைதிகாத்த பௌத்த – சிங்களப் பேரினவாதம், இப்போதே ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தீர்மான மிக்கதொரு சக்தியாக மாறிவிடக்கூடாது என்பதற்காக இனவாத – மதவாதத்தைக்கக்கி தென்னிலங்கையின் வாக்குவங்கியை தயார்ப்படுத்தத் தொடங்கியிருக்கிறது. தனிச் சிங்கள – பௌத்த வாக்குகளால் ஜனாதிபதி ஒருவ ரைத் தெரிவு செய்வதற்கான சூழலை அது மீண்டும் உரு வாக்கிக்கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் வைத் துப்பார்க்கும்போது ராஜபக்சக்களிலிருந்து ஒருவர் அடுத்து அரியணை ஏறுவதற்கான களச்சூழல் அமைத் துக்கொடுக்கப்படுகின்றதோ என்ற ஐயம் எல்லோர் மன திலும் எழவே செய்கின்றது.

### நாளொரு நல்வார்த்தை

"குடும்ப வாழ்க்கையில் எவ்வளவு காலம் நாம் வாழ்ந்தோம் என்பது முக்கியமில்லை; எவ்வளவு நேர்மை யாக வாழ்ந்தோம் என்பதே முக்கியம்"

- இங்கிலாந்து முதுமொழி



# இனவாத முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சி!

## தேசியப் புலனாய்வுப் பிரிவு கண்காணிப்பு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 26

நாட்டில் பல்வேறு தரப்பினர் இனவாத முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள் என்பதை தேசிய புலனாய்வுப் பிரிவு கண்காணித்துள்ளது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித் ததாவது:-

இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் இனவாத முரண்பாடுகள் தொடர்பில் வெளி நாட்டு புலனாய்வுப் பிரிவு மற்றும் நிறுவனங் கள் ஏதும் இலங்கைக்கு அறிவிக்கவில்லை. சமூக வலைத்தளங்கள் ஊடாக குறிப்பி டப்படும் வதந்திகளுக்கு எந்நேரத்திலும் பதி லளித்துக் கொண்டிருக்க முடியாது.

நாட்டில் பல்வேறு பகுதியில் பல்வேறு தரப் பினர் அரசியல் நோக்கத்துக்காக இனவாதம் மற்றும் மதவாத முரண்பாடுகளை தோற்று விக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண் டுள்ளதாக எமது புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளார்கள். குருந்தூர்மலை விவ காரம் குறித்து தற்போது பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. குருந்தூர் புராதன பூமியை கொண்டு பௌத்தமதத்தின் எதிர் காலமும், இந்து மதத்தின் எதிர்காலமும் தீர்மானிக்கப்படாது என்பதை அனைவரும் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். 30 வருட காலப்போர், உயிர் மற்றும் சொத்துச் சேதம் ஆகிய தாக்கங்களைத் தொடர்ந்தும் இன்றும் நாம் பாடம் கற்றுக்கொள்ள வில்லை.

நாட்டில் மீண்டும் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக் கமாட்டோம் - என்றார். (ஒ-6)

## பிக்குவுக்கு தடைபோட

# தொண்டமானுக்கு அதிகாரமில்லை

## சீறுகிறார் விதுர விக்கிரமநாயக்க

கொழும்பு, ஓக. 26

திருகோணமலை பொரலு கந்த ரஜமஹா விகாரையின் மகாநாயக்கர் அம்பிட்டிய சுகித வன்சதிஸ்ஸ தேரரை விகாரைக்குள் பிரவேசிக்க விடாமல் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மானின் நடவடிக்கை நியாய மற்றது என்றும் அவ்வாறு செயற்பட அவருக்கு அதிகா ரமில்லை எனவும் புத்த சாசன மற்றும் சமய அலு வல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நாடாளு மன்றத்தில் நேற்றுமுன்தி னம் தெரிவித்தார்.

அத்துரலியே ரத்தின தேரர் சபையில் எழுப்பிய கேள் விக்குப் பதிலளித்த அமைச் சர், தேரரை விகாரைக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் கிழக்கு மாகாண ஆளுந ரின் தீர்மானத்தை அரசாங் கம் ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்தார். ஆயினும், இவ் விவகாரம் தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்கு கள் நிலுவையில் உள்ள தால், அது தொடர்பான விவ ரங்களை வெளியிடும் நிலை யில் தாம் இல்லை என்று அமைச்சர் கூறினார். (ஒ-இ)

| | | |
|---|---|---|
| நாளை | 27.08.2023<br>ஞாயிற்றுக்கிழமை<br>ஆவணி 10 | சுபநேரம் : 09.05 – 10.35<br>ராகுகாலம் : 04.35 – 06.05<br>ஏகாதசி விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். போதனாவுக்கு அமரர் ஊர்தி நன்கொடை

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ். போதனா மருத்துவமனைக்கு 3 மில்லியன் பெறுமதியான அமரர் ஊர்தியொன்று எஸ்.கே.நாதன் பவுண்டேசன் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் நீண்டகாலமாக வாடகை அமரர் ஊர்தி அமர்த்தப்பட்டே சடலங்கள் வெளியேற்றம் செய்யப்பட்டன.

இந்தநிலையில் மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியின் கோரிக்கைக்கமைய மருத்துவமனைக்கென அமரர் ஊர்தி கையளிக்கப்பட்டது.

எஸ்.கே.நாதன் பவுண்டேஷன் பணிப்பாளர் நாதன், அமரர் ஊர்தியின் உரிமத்தை மருத்துவமனை பணிப்பாளரிடம் கையளித்தார்.

நிகழ்வில் யாழ்.போதனா மருத்துவமனை சட்டமருத்துவ அதிகாரி, பிரதிப் பணிப்பாளர், மருத்துவமனை அலுவலர்கள் பங்கேற்றனர். (ச-ரி3-125)

# சந்திரனைத் தொடுகிறது இந்தியா தரையைத் தோண்டுகிறது இலங்கை

## மனோ கணேசன் கிண்டல்

வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்குக் கீழே தொல்பொருளை தேடுகிறோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில்;

சந்திரனில் தடம் பதித்த நான்காம் நாடாகவும், நிலவின் தென் முனையில் விண்கலத்தை இறக்கிய முதலாவது நாடாகவும் பாரதம் சரித்திரம் படைத்துள்ளது. இந்திய மக்களுக்கும், அரசுக்கும், குறிப்பாக இந்திய இஸ்ரோ நிறுவனத்தின் 'சந்திராயன் - 3' வேலைத்திட்டப் பணிப்பாளர் வீரமுத்துவேல் தலைமையிலான விஞ்ஞான தொழில் நுட்ப அணிக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

ஆனால், வானத்தில் ஏறி சந்திர மண்டல வாசலை பாரதம் தொடும் போது, நாம் தரைக்குக் கீழே தொல்பொருளை தேடுகிறோம் என்ற உண்மையை உணர்ந்து வருந்துகிறேன்.

பாரதம் தந்த 13ஆம் திருத்தத்தின் மாகாணசபையும் இன்று குருந்தூர்மலையில் ஏறி விழுந்து நிற்கிறது. அது காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்று இழுபறிப் படுகிறது. சரித்திரத்தில் இருந்து பாடம் படிப்பதற்கு பதிலாக, எல்லாப் பிரச்சினைகளுக்கும் சரித்திரத்துக்குள் நுழைந்து பதில் தேடும் தோற்றுப்போன நாட்டவராக நாம் இன்று இருக்கிறோம் - என்றுள்ளது. (ஒ-இ)


**விற்பனைக்கு**

பாவித்த பழைய ஓடுகள் விற்பனைக்கு

077 923 1945

**தோட்டக் காணி விற்பனைக்கு**

புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில் 46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

077 706 6487

**பெயர் மாற்றம்**

70/5. ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்ட **பாத்திமா சஜா** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **சஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் எனது பெயரை **சஜா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 26069) (N-1) சஜா

**பெயர் மாற்றம்**

70/5. ஈச்சமோட்டையில் வசிக்கும் **பாத்திமா நிஜா** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **நிஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் எனது பெயரை **நிஜா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs 26069) (N-1) A நிஜா


# கட்டுமான கண்காட்சியாழில்

யாழ்ப்பாணம், ஓக. 26

'ஐங்கரன் மீடியா சொலுஷன்' மற்றும் கட்டட நிர்மாணத்துறை கழகம் என்பன இணைந்து நடத்தும் வீடமைப்பு மற்றும் கட்டுமானக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கண்காட்சி அடுத்தமாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ்.முற்றவெளி மைதானத்தில் முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

நிர்மாணத் தேவைகளான வரை படம் முதல் நிர்மாணம் வரையிலான சகல விதமான தகவல்களும் கண்காட்சியில் அமையப் பெறும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-ரி3)


**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 2023**

காலம் : 10.09.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
இடம் : பாடசாலையின் பிரதான மண்டபம்


பிரேரணைகளை முன்வைக்க விரும்புவோர் 06.09.2023 திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.
அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் மற்றும் அங்கத்துவத்தை அன்றைய தினம் பெற்றுக்கொள்ளமுடியும்.
பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.அசோக்குமார்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/வேலணை மத்திய கல்லூரி.

(CS 51321) A-1



**கண்ணீர் அஞ்சலி**


எமது யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் பிரதம மருந்தாளர்

**இராயலட்சுமி செல்வநாயகம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருந்தாளர்கள்
போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

(cs1811) (N-1)


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## சபை நிதி - 2023

01) தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சூரியகல தொகுதி பொருத்துவதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார். விலைக் கேள்வியானது தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

02) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

01. கேள்விதாரர் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் (Sri Lanka Sustainable Energy Authority - SLSEA) Solar System வழங்குநராக பதிவு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

02. கேள்விதாரர் சூரிய கல தொகுதி சார்பாக பின்வரும் விடயங்களில் (Design, Planning, Supplying, Installing, Testing, Commissioning and Maintenance) மேற்கொள்வதில் குறைந்தது 02 வருட அனுபவம் உடைய கம்பனியாக இருத்தல் வேண்டும்.

03. வழங்குநர் முழு சூரியகல அமைப்பினையும் பராமரிக்க கூடிய உள்நாட்டு முகவரை கொண்டிருப்பதுடன் இரு வார காலத்தினுள் உதிரிப்பாகங்களை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. இலங்கையில் சூரிய கல உற்பத்தி மற்றும் அது சார்ந்த உதிரிப்பாகங்கள் வழங்குதல் தொடர்பான திருப்திகர சேவைப்பதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

03) ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபை (தொலைபேசி 021-2240017) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

04) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணமொன்றை வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் என்னும் முகவரியில் 26.08.2023 ஆம் திகதியிலிருந்து 11.09.2023 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 3,000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

05) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு 12.09.2023 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள் கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

07) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் வைப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு VAT நீங்கலாக) (Mn) | ஒப்பந்த காலம் | கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41/VSPS/01/2023 | Supply, Installation, Commissioning and Maintenance of 20 kW Grid Connected Solar PV System at Head office valikamam South Pradeshiya sabha, Chunnakam 2nd floor root Top | 3.834 | 30 நாட்கள் | 63 நாட்கள் | 14.11.2023 | 39,000.00 | 12.12.2023 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**
**26.08.2023**

(cr 39908) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GLOBAL EDUCATION EXPO IN JAFFNA
by Edlocate



UP TO 100% Scholarships*

SEPTEMBER 09TH

நேரம்: காலை 9 முதல் மதியம் 1 மணி வரை

இடம்: யாழ் இந்துக்கல்லூரி, சபாலிங்கம் அரங்கு

Australia | New Zealand | Canada | England | Ireland | Malaysia | Vietnam

edlocate
Reach Light Beyond Boi
www.edlocate.lk

மேலதிக தகவல்களுக்கு
077 2223178 | 021 5700750

Follow Us On

ENTRANCE FREE

Over 100 Universities | Over 2500 Student success stories | We will handle Visa | 23 Years of excellence | All our services are free of professional fee

*T&C APPLY


# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை- 2023

01. வலிகாமம் வடக்குபிரதேச சபை மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை கொண்டு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய மற்றும் 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம். தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டிட புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.

04. கேள்விதாரர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன். கட்டட நிர்மான அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:-0212241130. தொலைநகல்:-0212243688இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 26.08.2023 ஆம் திகதியிலிருந்து 18.09.2023 வரை காலை 09.00 மணி முதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்குபிரதேசசபை. காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 26.08.2023 ஆம் திகதியிலிருந்து 18.09.2023வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 18.09.2023 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/01/272/PSDG/02/2023 | எரிகொட்டகை அமைத்தல் - பளைவீமன்காமம் இந்துமயானம் | 1.301 | 60 நாட்கள் | C9 & C8 (கட்டிடம்) | 49 நாட்கள் | 06.11.2023 | 14,000.00 | 04.12.2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 11.09.2023 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை. காங்கேசன்துறை அலுவலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திரு.சு.சுதர்ஜன்,**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**
**26.08.2023**

(cr.40020) N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள் அறிமுகம்

யாழ். ஓக. 26 சமுத்திரனின் நான்கு நூல்கள் அறிமுகமும் கலந்துரையாடலும், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரியில் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

செ.மதுசூதனன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் சி.அ.யோதிலிங்கம், விரிவுரையாளர் வேலும்மயிலும் சேந்தன், முதுநிலை விரிவுரையாளர் முனைவர் தி.செல்வமனோகரன், ஆசிரியர் மா.மோகனகிருஷ்ணன் ஆகியோர் உரையாளர்களாகக் கலந்துகொள்கின்றனர். (ம)

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்
ஆசிரியர் திருமதி
**இந்திராதேவி சிவகுருநாதன்**
**SLTS - I Primary Trd**

**சேவை விபரம்:**

- யா / எருதிடல் அ.த.க. பாடசாலை 10.11.1988 - 24.02.1991
- யா / கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி 25.02.1991 - 01.02.1992
- யா / எருதிடல் அ.த.க. பாடசாலை 02.02.1992 - 04.01.2004
- யா / கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் 05.01.2004 - 26.01.2011
- யா / நாவற்குழி மகா வித்தியாலயம் 27.01.2011 - 24.04.2018
- யா / கைதடி குருசாமி வித்தியாலயம் 25.04.2018 - 25.08.2023

Best Wishes Congratulations 60 Best Wishes

முப்பத்தைந்து வருடங்கள் முழு மனதாய் கல்விப் பணி செய்து மணிவிழாக் காணும் இந்நாளில் மனநிறைவாய் வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்

(cr.40013) (N.1)

# ருமேனியா நாட்டிற்கான வேலைவாய்ப்புகள்

| இல. | தொழில் | எண்ணிக்கை | அடிப்படை சம்பளம் |
|---|---|---|---|
| 01 | HELPER GENERAL | 149 | 2900 RL |
| 02 | HELPER KITCHEN | 28 | 2800 RL |
| 03 | LABOUR CONSTRUCTION | 99 | 2950 RL |
| 04 | RESTURANT KITCHEN CHEF | 29 | 4250 RL |
| 05 | WORKER FACTORY | 93 | 3300 RL |
| 06 | WORKER GENERAL | 199 | 3400 RL |
| 07 | WORKER GENERAL CLEANER | 298 | 3250 RL |

LIE 01 = RS, 71.24 பணத்தின் பெறுமதி காலத்திற்கேற்ப மாறுபடும்.

1. வேலை நேரம் 8 மணித்தியாலயம், வாரத்திற்கு 1 நாள் விடுமுறை வழங்கப்படும்.
2. சேவைக்காலம் 2 வருடங்கள்.
3. தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
4. உணவிற்கான பணம் (460 Lie) சம்பளத்துடன் சேர்க்கப்படும்.
5. மருத்துவ வசதிகள் மற்றும் சமையல் வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
6.02 வருட சேவைகால முடிவின் பின் திரும்பி வருவதற்கான விமான டிக்கட் இலவசம்.
6. ஏனைய சட்டதிட்டங்கள் ருமேனியா நாட்டின் தொழிலாளர் சட்டத்திற்கேற்ப அமையும்.


அனுமதிப்பத்திர இலக்கம் : 2997 வேலை ஒழுங்கு பிரிவு : AL/2997/0003/22

தொடர்புகளுக்கு:
கிருனி ரீகல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.
இல: 5/2/1, நொயேல் செனவிரத்ன மாவத்த,
கொழும்பு வீதி, குருணாகல்.
தொலைபேசி : 076 357 7944
மின்னஞ்சல்: kiruni488@gmail.com

(cs.25014) N.1

# மரண அறிவித்தல்

தோற்றம் . 03 . 01 . 1961



மறைவு . 25 . 08 . 2023

## தில்லைநாயகம் இரத்தினகுமார்

பவளவாசா மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாயகம் இரத்தினகுமார் நேற்று (25.08.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"பவள வாசா"
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
தொடர்பு: 077 941 5897
077 818 9450

(cs.51810) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 01 . 1947



மறைவு 23 . 08 . 2023

## செல்லையா சின்னத்துரை

(ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சின்னத்துரை கடந்த 23.08.2023 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் பசுபதி காலஞ்சென்ற விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் புஷ்பராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கராசா, கந்தசாமி மற்றும் பூபதி, மகாலட்சுமி, சந்திரமலர், கமலாம்பிகை, சந்திராதேவி, தனலெட்சுமி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற விஜயராணி, மற்றும் செல்வராணி, ஸ்ரீகாந்தன், வசந்தராணி, காந்தரூபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற றெஜினா மற்றும் எழில்வேள் (பல் வைத்தியர், தேசிய வைத்தியசாலை - கொழும்பு), கிஷ்ணவேள் (ஆசிரியர் - மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிருந்தா (பல் வைத்தியர் - மகரகம), கிஷாந்தினி (ஆசிரியர் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விகானா, வர்ணிகா, சகாதேவ் ஆகியோரின் அன்பிற்குரிய பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடி பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வசந்த பவனம்"
மருதடி மேற்கு,சாவகச்சேரி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

CS 26065 M-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 08 . 1928



மறைவு 23 . 08 . 2023

## திருமதி பத்மநாதன் இராஜேஸ்வரி (மம்மி)

கோலாலம்பூரை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் தற்போது 146, பத்மகிரி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் இராஜேஸ்வரி (மம்மி) கடந்த (23.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி சுபத்திரை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அப்பையா இராசம்மா தம்பதியரின் மருமகளும், Dr. பத்மநாதனின் அன்புத் துணைவியாரும், Dr. சாமளா (இலண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும், Dr.பங்கையற்செல்வன் (இலண்டன்) அவர்களின் மாமியும், Dr. மயூரன் - Dr. ஜெமினா (இலண்டன்), Dr. ஆர்த்தி - Dr. சேது (இலண்டன்) ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், கயோ, ஓவியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, இராஜலட்சுமி, சரஸ்வதி, செல்வராணி, தங்கராணி, புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சரஸ்வதி, பத்மநாதன், பஞ்சலிங்கம், புஸ்பராணி, பாலசுந்தரம், விமலராணி மற்றும் இந்திராணி (இலண்டன்), ஜெயராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை இல.146, பத்மகிரி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
முருகதாஸ் (ரவிராஜ் - 077 310 1462)
பிறேமிலா (லைலா - 077 845 4559)
நிர்மலா (நிம்மி - 077 315 3241)
சுலக்ஷன் - (077 778 0344)
கிரிசாந்தன் (கிரி - 076 739 2368)

146, பத்மகிரி, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(cs 51813) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மண்ணில் 23 . 08 . 1943



விண்ணில் 25 . 08 . 2023

**கார்த்திகேசு உருத்திரசுந்தரம் (கடவுள்)**

**(முன்னைநாள் சாலை முகாமையாளர், இலங்கை போக்குவரத்து சபை, காரைநகர்)**

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு உருத்திரசுந்தரம் அவர்கள் நேற்று (25.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்ணகாதேவி அவர்களின் பாசமிகு கணவரும் கோகிலா (ஆசிரியர் - யா/நாவற்குழி மகா வித்தியாலயம்), தவபாலன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கேதீஸ்வரன் (ஆசிரியர் - யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) நிரோஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**புலம் வீதி, கைதடி மேற்கு, கைதடி.**

**குடும்பத்தினர்**

CS 26080 M - 1 **077 8034 224, 077 7570 076**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 29 . 01 . 1938



மறைவு 25 . 07 . 2023

கடந்த (25.07.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த

அமரர் **பரமேஸ்வரி மாசிலாமணி (மணியக்கா)**

அவர்களின்

வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகைதருமாறு அழைக்கின்றோம்.

**ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**குடும்பத்தினர்**

# சந்திரனில் 'சந்திராயன் -3' ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழும்பு, ஓக. 26

'சந்திராயன் - 3' விண்கலத்தை சந்திரனின் தென் துருவத்தில் முதன்முறையாக வெற்றிகரமாக தரையிறக்கிய இந்தியாவின் தனித்துவமான வரலாற்றுச் சாதனைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இந்தியப் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய வாழ்த்துச் செய்தியில்,

வெற்றிகரமாக சந்திரனின் தென் துருவத்தில் 'சந்திராயன் - 3' விண்கலத்தை தரையிறக்கியமை இந்தியா அடைந்துள்ள தனித்துவமான சாதனையாகும்.

இந்தியாவின் இந்த வரலாற்றுச் சாதனையை அண்டை நாடான இலங்கை பெருமிதம் கொள்கிறது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ குழுவினருக்கு வாழ்த்துகள்.



இது எதிர்கால சந்ததியினரை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைய ஊக்குவிக்கும்- என்றுள்ளது. (ச-26)

# முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்புக்கு நான் ஏன் மன்னிப்புக் கோரவேண்டும்?

## கெஹலிய விடாப்பிடி

கொழும்பு, ஓக.26

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை எரித்தமைக்கு மன்னிப்புக் கோரமுடியாது. அதுதொடர்பில் ஆராய குழுவொன்றை வேண்டுமென்றால் நியமியுங்கள். இவ்வாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வல நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையில்,

"கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இறந்த முஸ்லிம்களின் சடலங்களை எரித்தமை ஒரு வெறுப்பேற்றும் செயல். இதற்காக சுகாதார அமைச்சர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்" - என்றார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, "வேண்டுமானால் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இறந்த முஸ்லிம்களின் சடலங்களை எரித்தமை பற்றி ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமியுங்கள். என்னால் மன்னிப்புக் கேட்க முடியாது" - என்றுள்ளது. (ச-6)

## ஆளுநரின்...

வைக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் செயலக வட்டாரத்தில் இருந்து அறிய முடிகின்றது.

வேலணை மற்றும் உடுவில் பிரதேச செயலராக யாழ். மாவட்டத்தில் 13 வருடங்கள் கடமையாற்றியிருந்தார். பின்னர் கொழும்பிலுள்ள நிதி அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலராகவும், சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலராகவும் பணியாற்றி இலங்கை நிர்வாக சேவையில் நீண்ட அனுபவமும் ஆளுமையும் கொண்டவரான மு.நந்தகோபாலன் தற்போது வடக்கு ஆளுநரின் செயலராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். (அ-ம-26)

# பயங்கரவாத விசாரணைப்பிரிவினர் கோமகனை அழைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் நலன்களுக்காகச் செயற்பட்டு வருகின்ற குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகனை தாம் விசாரணைக்காக அழைக்கவில்லை என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

கோமகன் அண்மைக்காலமாக இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் அழைக்கப்பட்டு விசாரணை என்கின்ற போர்வையில் அச்சுறுத்தப்பட்டு வந்துள்ளார். இறுதியாக, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு சுமார் ஒன்றரை மணிநேரம் விசாரிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாட்டைப் பதிவுசெய்திருந்தார்.

இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு 15 மாதங்கள் கடந்த நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று அவரை [illegible] தமது அலுவலகத்துக்கு அழைத்துள்ளது. இதையடுத்து அங்கு சென்ற அவருக்கு, பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடமிருந்து கிடைக்கப்பெற்ற சிங்கள மொழிமூல பதில் தகவல் வாசித்துக் காட்டப்பட்டுள்ளது. அதில், 'தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் கோமகனது செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச கிராம அலுவலரிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவு கேட்டறிந்துகொண்டது. எவ்வேளையிலும் அழைக்கவில்லை' என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் தெரியப்படுத்தியுள்ளனர் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உண்மைக்குப் புறம்பான இத்தகு செயற்பாடுகள், குடிமக்கள் சார்ந்து செயற்படுகின்ற சிவில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகத் துறைசார் செயற்பாட்டாளர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| தோற்றம் 09 • 07 • 1944 | மறைவு 23 • 08 • 2023 |



## திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி (குணம்)

வாகையடி, மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு குணபாக்கியவதி (குணம்) கடந்த (23.08.2023) புதன்கிழமை உசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நாராயணபிள்ளை நாகமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட மருமகளும் கார்த்திகேசு (சிவபாதம் - ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும் முரளிதரன் (லண்டன்), யசிதரன் (லண்டன்), தயாளதரன் (லண்டன்), அகல்யா ( ஆசிரியை - யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), அனுஸா (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (லண்டன்), கந்தவேள் (இலங்கை திறந்த பல்கலைகழகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் பத்மநாதன் (ஆசிரியர்), இராசரத்தினம் (நவாலி), அமரர் தனபாக்கியவதி (தனம் ரீச்சர் மட்டுவில்), அமரர் பத்மாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சிவசுப்பிரமணியம் சிவகுரு, அமரர் சிவராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சோபிதா (மருத்துவர், லண்டன்) அவர்களின் பெரியதாயாரும் கௌசிகன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), அபினாஸ் (லண்டன்), கேசிகா, மிபிஷா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிற்றம்பலம் வீதி,
உசன், மிருசுவில்.


தகவல்: குடும்பத்தினர்
077 6314 178

(CS 26074) A-III

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| தோற்றம் 11 • 02 • 1947 | மறைவு 25 • 08 • 2023 |



## கந்தசாமி இராமலிங்கம் (அப்புச்சி)

வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராமலிங்கம் (அப்புச்சி) நேற்று (25.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி அன்னபூரணம் தம்பதியரின் மூத்த மகனும், நுணாவிலைச் சேர்ந்த மயில்வாகனம் தையல்நாயகி தம்பதியரின் மூத்த மருமகனும், மனோகரிதேவியின் அன்புக் கணவரும், பவளவதனி (கனடா), ஜெயவதனி (கனடா), தர்மசீலன் (கனடா), மதிவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாஸ்கரன் (கனடா), சிவகுமார் (இந்தியா), அர்ச்சனா (கனடா), பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற நேதுகன் (கனடா), திசாலினி (கனடா), நிதுசா (கனடா), நிலக்ஷா (கனடா), வினுஷாந் (கனடா), விகேஷ் (கனடா), வர்ஷன் (கனடா), திஷாந்த் (பிரான்ஸ்), தியோணிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், சந்திரசேகரம் (கனடா), ஆனந்தராசா, சற்குணம், நடனசிவம், தவமலர் ஆகியோரின் சகோதரனும், நாகேஸ் (கனடா), செல்வராணி, நீலா, காலஞ்சென்ற தவலக்ஷிமி, புண்ணியமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.இல:074 3550 930 (மகன்)
077 3158 597 (மனைவி)

தகவல்:
குடும்பத்தினர்

(CS 26079) A-1

# மரண அறிவித்தல்

| | |
|---|---|
| தோற்றம் 20 • 08 • 1998 | மறைவு 23 • 08 • 2023 |



## முருகேஸ் முரளிகாந்

ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேஸ் முரளிகாந் அவர்கள் கடந்த (23.08.2023) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 0333 393

(CS 26081) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரசேகரவுக்கு...

முல்லைத்தீவு, மன்னார், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி உள்ளிட்ட அனைத்து நீதிமன்றங்களின் முன்பாகவும் இந்த அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் தெரிவித்ததாவது:-

இலங்கையில் உள்ளது ஒரேயொரு நீதித்துறை. அதில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பாகுபாடுகளின்றி நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளே கடமையில் ஈடுபட்டுள்ளனர். அந்த நீதிபதிகளின் சுதந்திரத்தையும், அவர்களுடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டியது அரசின் கடமை. சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தையும் கடைப்பிடிக்கவேண்டிய சட்டத்தை உருவாக்கும் நாடாளுமன்றில், நீதித்துறையின் சுதந்திரத்தை பாதிக்கும் வகையில், நீதிபதியின் தனிப்பட்ட சுயாதீனத் தன்மையை கேள்விக்குறியாக்கும் வகையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். அந்தவகையில் வீரசேகர தெரிவித்துள்ள கருத்துக்கள் நீதித்துறைக்கு ஏற்பட்ட அவமானம். தனது கருத்துக்கள் சரியானவையென்றால், நாடாளுமன்றத்துக்கு வெளியே பொது வெளியில் வீரசேகர தன் கருத்துக்களைத் தெரிவிக்கட்டும் - என்றனர்.

(அ-ம-26,125,246,9,159,20,27)

## கஜேந்திரகுமாரின்...

இவ்வாறு பொலிஸாரிடம் சூளுரைத்துள்ளார் ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட டை முற்றுகையிடுவதற்கு உதய கம்மன்பில உள்ளிட்ட சிலரால் அறைகூவல் விடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய தனது ஆதரவாளர்கள் சிலருடன் அந்தத் தேரர் கஜேந்திரகுமாரின் வீட்டுக்கு நேற்று வந்திருந்தார். இதன்போது பொலிஸார், தேரர் தலைமையிலான குழுவினரைத் தடுத்து நிறுத்தினார்கள். இதையடுத்தே தேரர் பொலிஸாரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எதற்காகத் தள்ளுகின்றீர்கள்? கஜேந்திரகுமாருக்கு பயமா? வெட்கம், வெட்கம். ரணிலுக்கும் பயம், மஹிந்தவுக்கும் பயம், கோத்தாபயவுக்கும் பயம். அவர்கள் தற்போது வடக்கு - கிழக்கில் தமக்குத் தேவையானவற்றைச் செய்கின்றனர். சட்டத்தையும், பொலிஸாரையும் மதித்து தற்போது இங்கிருந்து செல்கின்றோம். ஆனால், கஜேந்திரகுமாரின் வீட்டுக்கு மீண்டும் வருவோம். மக்கள் சக்தியுடன் வருவோம். அதுவும் சிங்கள - பௌத்த மக்கள் சக்தியுடன் வருவோம்' - என்றார். (அ-ம-44)

## அதிகாரப்...

வழங்கியுள்ளார் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹரினி அமரசூரிய.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை, எனவே, புதியதொரு அரசமைப்பின் ஊடாக அதற்கான விடை தேடப்படவேண்டும். மக்களுக்கு அதிகாரங்களை வழங்குவதே ஜனநாயகமாகும். அந்த அதிகாரம் என்பது வாக்குரிமையாக மட்டும் இருக்கக்கூடாது. அதேபோல அதிகாரப்பகிர்வின் மூலம் ஜனநாயகம் மேம்படும். அந்தவகையில் அதிகாரப்பகிர்வு கொள்கையை ஜே.வி.பி. ஆதரிக்கும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வெனக் கூறப்பட்டாலும் அவ்வாறு தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. '13' முன்வைக்கப்பட்ட பின்னரே போர் உக்கிரமடைந்தது. எனவே, அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை கிடைக்கும் வகையில், அனைவரும் சம அந்தஸ்துடைய பிரஜைகளாக வாழும் வகையில் தீர்வுப் பொறிமுறை அவசியம். அதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்பொன்று அவசியம். இதனை இதய சுத்தியுடன் செய்யக்கூடிய அரசொன்றும் அவசியம்' - என்றார். (அ-ம-44)

## சஜித்...

சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, ஹரிசன் ஆகியோர் மீண்டும் கட்சிக்குள் வந்துள்ளனர். இது மகிழ்ச்சியளிக்கின்றது. கட்சியை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் தாய்வீட்டுக்கு வாருங்கள். எவரையும் ஐக்கிய தேசியக் கட்சி வெளியேற்றவில்லை. அவர்களாகவே சென்றார்கள். எனவே, மீண்டும் வருவதில் பிரச்சினை இருக்காது.

சிலர் கறுப்பை, வெள்ளையாக்கி பரப்புரைகளைச் செய்தனர். இதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாக்கம் ஏற்பட்டது. வாக்காளர்கள் நடுநிலை வகித்தனர். ஆனால், இன்று யதார்த்தம் புரிந்துள்ளது. அது வெள்ளை அல்ல கறுப்புத்தான் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். கட்சியை பலப்படுத்த வேண்டும். பிளவுபட்டுள்ளவர்களை இணைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்' - என்றார். (அ-ம-44)

## நீர்த் தொட்டியில்...

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையைக் காணவில்லை என்று பெற்றோர் தேடியபோதே குழந்தை அருகிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் வீழ்ந்து கிடந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. எனினும், குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். நெளுக்குளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ம-110,27)

## பாடசாலைச்...

உள்ளிட்டவை ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்தப்பேரணிகள் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

போதைப் பாவனையை முற்றாக இல்லாதொழித்து வளமான கல்விச் சூழலை உருவாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-113)

## இலங்கைக்...

குசல் பெரேரா மற்றும் அவிஸ்க பெர்ணாண்டோ ஆகிய இரண்டுவீரர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய வீரர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றனர். கொரோனாத் தொற்று விடயத்தில் சர்வதேச கிரி[illegible] தற்போது தளர்வான விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றபடியினால் இந்தத் தொற்று நிலைமை தொடரில் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படவில்லை. ஆனால், இலங்கை அணியின் பெறுபேற்றில் இது பெரும் சவாலை வழங்கலாம் என்று கருதப்படுகின்றது. (அ-ம)

## இலங்கையில்...

வர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது அதிகரித்துள்ளது. இது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும். அதைத்தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் அவசியம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் பத்திரிகை ஆசிரியர்களையும், சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும் தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசினார். அந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்குக்கான எனது பயணத்தின்போது, பலரும் மூளைசாலிகள், தொழில் தேர்ச்சியாளர்கள், மருத்துவர்கள் போன்றோர் நாட்டைவிட்டு அதிகளவு வெளியேறி வருவது குறித்து தமது கவலையை வெளியிட்டார்கள். இவற்றின் தாக்கம் உடனடியாகத் தெரியாவிட்டாலும், எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும். போர் இடம்பெற்ற காலத்தைவிடவும் தற்போது அதிகளவானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என்று அறிய முடிகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இந்தப் புலம்பெயர்வோரின் எண்ணிக்கை கணிசமானதாக உள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமையே இதற்குக் காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதைத் தடுக்காவிட்டால் இலங்கை வரும்காலத்தில் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கும். இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அமெரிக்காவும் இந்த விடயத்தில் ஒத்துழைப்புகளை வழங்கும் - என்றார். (அ-எ)

## 656,000 லீற்றர்...

தண்ணீர் தேவைப்படுகின்றது. பல்வேறு மார்க்கங்கள் மூலமாக தீவகத்துக்குத் தற்போது விநியோகிக்கப்படும் தண்ணீரின் விநியோக அளவை வைத்தே இந்தப் புள்ளிவிவரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**நெடுந்தீவு**

நெடுந்தீவுக்கு மட்டும் தினமும் 99 ஆயிரம் லீற்றர் தண்ணீர் அனைத்துத் தேவைகளுக்காகவும் விநியோகிக்கப்படுகின்றது. நெடுந்தீவுப் பிரதேசசபை 15 ஆயிரம் லீற்றர் தண்ணீரையும், நெடுந்தீவு பிரதேச செயலகம் 24 ஆயிரம் லீற்றர் தண்ணீரையும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை (ஆரோ பிளான்ட்) 60 ஆயிரம் லீற்றர் தண்ணீரையும் தினமும் வழங்கி வருகின்றன.

**ஊர்காவற்றுறை**

ஊர்காவற்றுறை பகுதிக்கு தினமும் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் லீற்றர் தண்ணீர் அனைத்துத் தேவைகளுக்காகவும் தினமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் 11 ஆயிரம் லீற்றர் தண்ணீரும், ஊர்காவற்றுறை பிரதேசசபையால் 6 ஆயிரம் லீற்றர் தண்ணீரும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ஒரு இலட்சம் லீற்றர் தண்ணீரும் வழங்கப்படுகின்றன.

**வேலணை**

வேலணைப் பகுதிக்குத் தினமும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் லீற்றர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. வேலணை பிரதேசசபையால் 10 ஆயிரம் லீற்றர் தண்ணீரும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் தண்ணீரும் வழங்கப்படுகின்றது. இதைவிட மண்டைதீவுப் பகுதிக்கும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை தினமும் 50 ஆயிரம் லீற்றர் தண்ணீரை வழங்கி வருகின்றது.

**நயினாதீவு**

நயினாதீவுக்குத் தினமும் ஒரு இலட்சம் லீற்றர் தண்ணீர் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்படுகின்றது என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

**காரைநகர்**

காரைநகர் பகுதிக்குத் தினமும் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லீற்றர் தண்ணீர் வழங்கப்படுகின்றது. எனினும் அந்தப் பகுதிக்கு பிரதேச செயலகத்தாலும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையாலும் தண்ணீர் வழங்கப்படவில்லை. பிரதேசசபையால் தினமும் 55 லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. இதைவிட பல்வேறு தனியார் நிறுவனங்களால் தினமும் 75 ஆயிரம் லீற்றர் தண்ணீர் வழங்கப்படுகின்றது.

'எல் நினோவின்' தாக்கத்தால் வறட்சி உச்சத்துக்குச் சென்று தண்ணீரின் விநியோக மார்க்கங்கள் பாதிக்கப்பட்டால் தீவகத்தின் தண்ணீர்த்தேவையை நிவர்த்திசெய்வது மிகவும் சிரமமாக இருக்கும் என்றும், ஆதலால் பொதுமக்கள் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடும் வறட்சி காரணமாக வடக்கில் அண்மைக்காலமாக தண்ணீரின் இருப்பிழப்பு வேகமாக அதிகரித்து வருகின்றது என்று தொடர்ச்சியாக எச்சரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## நாடாளுமன்றத்துக்கு...

கருத்துக்களைத் தெரிவிக்க அவருக்குத் தைரியம் உள்ளதா? என்று வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் வீரசேகரவுக்கு சவால் விடுத்துள்ளது.

வீரசேகரவுக்கு எதிராக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின்போது, வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்குகளைக் கையாளும் நீதிபதியை பாதிக்கும் வகையிலான அல்லது அவருடைய கடமையில் அழுத்தங்களை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை வீரசேகர வெளிப்படுத்தியுள்ளார். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தியே வீரசேகர இவ்வாறு கதைக்கின்றார். தன் நிலைப்பாடுகளும் கருத்துக்களும் சரி என்றால் முடிந்தால் அவர் நாடாளுமன்றத்துக்கு வெளியே வந்து இவ்வாறு கதைக்க வேண்டும்.

அவரது உரை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவருக்கு முகவுரையிடப்பட்டு, ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஆகிய தரப்பினருக்கு முறைப்பாடு ஒன்று வழங்கவுள்ளோம். இது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பிலும் இந்தக் கடிதம் அனுப்பப்படவுள்ளது - என்றார். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டட வேலை

உங்கள் வீட்டினை விரைவாகவும்
தரமாகவும் கட்டித்தரப்படும்.

074 077 1490

## வேலை வாய்ப்பு

நெல்லியடி வண்ணமயில்
புடைவைக் கடைக்கு அனுபவமுள்ள
மற்றும் பழக விரும்பும் பெண் விற்பனை
உதவியாளர்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

077 805 2735

(CS 24727) (N-1)

## Mini Supermarket ற்கு வேலைக்கு ஆட்கள் தேவை

பகுதி நேரம், முழுநேரம் அடிப்படையில் வேலைபார்க்கலாம் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்.

076 320 1987

விபரங்கள் நேரில் தெரிவிக்கப்படும்.

## விற்பனைக்கு

மகேந்திரா மக்சிமோ
அலுமினியம் Body உடன் கூடிய
Bady வகை வாகனம்
விற்பனைக்கு உண்டு.
T.P: 070 521 2138

## வரலாறு, கணிதம்
## 09 - O/L, A/L வகுப்புக்கள்

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனியாகவோ குழுவாகவோ வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேறுக்காக வழிகாட்டும் ஆசான். (தனியார் கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்)

077 482 5438 (CS 51796) AH-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலுக்கு மிக அருகாமையில் மாநகர சபைக்கு முன்பாக வங்கிகள், தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற வாகன தரிப்பிட வசதி கொண்ட 6 அறைகளுடன் கூடிய வீடு நீண்டகால வாடகைக்கு வழங்கப்படும்.

தொடர்பு:- 075 598 1489

## DHL வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.

# காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியால்யத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

நிலப்பரப்பு

பார்வையிடும் நேரம் :-
காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு
076 755 8606, 077 8743 204, 077 2880 152.

(CS 26071)A-1


# மரண அறிவித்தல்

## ஞானப்பிரகாசம் எட்வேட்

(ஓய்வுபெற்ற ரெலிக்கொம் உத்தியோகத்தர்)



பிறப்பு 26 . 04 . 1955

இறப்பு 25 . 08 . 2023

இளவாலையைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளி, விதானையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் எட்வேட் அவர்கள் நேற்று (25.08.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அசம்ரா பத்மநாயகி அவர்களின் அன்புக் கணவரும், இம்மானுவேல், மேரிலூர்து, காலஞ்சென்ற அல்பிறட், லில்லி, மரியநாயகம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், எட்வினா (ஆசிரியை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், லக்ஷ்மணன் (போதனாசிரியர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், ஜோறிக் மினோஷன், ஆன் திபிசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.08.2023) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 222 3260

(CS 26076)A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1941



மறைவு 23 . 08 . 2023

## தியாகராஜா பூமணி (பேபி)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பூமணி (பேபி) கடந்த (23.08.2023) அன்று கர்த்தருள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதியரின் மகளும், வைத்திலிங்கம் சுந்தராம்பாளின் மருமகளும், காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சரஸ்வதி, கனகரட்ணம், குமாரசூரியர், இராஜகோபால் மற்றும் மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, சங்கரப்பிள்ளை, அமராவதி, சரஸ்வதி, ஞானாம்பாள் மற்றும் பார்வதிபிள்ளை, கனகம்மா, அன்னலட்சுமி, நாகரட்ணம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், புவீந்திரராஜா (பிரான்ஸ்), பகீதரன் (கனடா), துஸ்யந்தி (கனடா), Dr.பிரதீபன் (யாழ். போதனா வைத்தியசாலை), பரதன் (பிரான்ஸ்), தமயந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஹேமலதா (பிரான்ஸ்), லோகன்திரன் (கனடா), சுசந்தா (விரிவுரையாளர் விவசாய பீடம் யாழ். பல்கலைக்கழகம்), ஹேமறாஜி ஆகியோரின் மாமியாரும், கீர்த்திகா, தன்சிகா, காவியா, கஜந்தன், கவின், தனிஸ்கா, பிரக்யா, லெனி, லிவ்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வைற்ஹவுஸ் மண்டபத்தில் அஞ்சலிக்காக (சனி, ஞாயிறு) வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனை நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு வைற்ஹவுஸ் பிரதான வீதி. (White House Main street 180) இல் நடத்தப்பட்டு பூதவுடல் வசந்தபுரம் கெலன் தோட்டத்தில் உள்ள (Assemply of God) திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் - (Dr.பிரதீபன்)
077 857 8597

(cs 51806) (N-1)

# மரண அறிவித்தல்



## அருளையா சுப்பிரமணியம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளையா சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (24.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளையா தையலம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தெய்வானை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அரியமலரின் (லீலா) அன்புக் கணவரும், குகதாசன் (சுவிஸ்), காலஞ்சென்ற உதயதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி (சுவிஸ்), கௌசலா (கௌசி - ஆசிரியர் - யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி - புத்தூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வசீகரன் (யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி), ஜான்சன் (சுவிஸ்), உதிசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஞானம்மா மற்றும் தவராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 51807) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : [illegible] விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.